மதுரைக் கல்லூரி (தன்னாட்சி), மதுரை-11
(சுயநிதிப்பிரிவு)
Phone: (0452) 2674454
Estd.1889

Dr. S. சூரியநாராயணன் M.A., M.Sc., M.LIS., Ph.D.
முதன்மை ஒருங்கிணைப்பாளர்

வித்யா நகர்
டி.பி.கே. ரோடு
மதுரை- 625011.

நாள் - 09.05.2022

## புரிந்துணர்வு ஒப்பந்தம்; (MOU)

2022ஆம் ஆண்டு மே மாதம் 09ஆம் தேதி

மதுரை மாநகர், திருப்பரங்குன்றம் சாலை, வித்யா நகரில் இயங்கி வரும் மதுரைக் கல்லூரிக்காக, சுயநிதிப் பிரிவு முதன்மை ஒருங்கிணைப்பாளர் முனைவர் சு. சூரியநாராயணன் ஒன்றாம் தரப்பாகவும், தமிழ்த்துறை ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. கார்த்திகேயன், பயிற்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி து.கோ. வரலெட்சுமி ஆகியோர் ஒன்றாம் தரப்பின் சார்பாளர்களாகவும்

மதுரை மாநகர், பசுமலையில் இயங்கி வரும் அரசு இசைக் கல்லூரிக்காக அக்கல்லூரியின் முதல்வர் கலைமாமணி சி. டேவிட் இரண்டாம் தரப்பாகவும், துறைத்தலைவர் பி. சம்பூர்ணம், ஆர். ஸ்ரீசபரிப்ரியா ஆகியோர் இரண்டாம் தரப்பின் சார்பாளர்களாகவும் இருந்து இரண்டு தரப்பினரும் சேர்ந்து கீழ்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படுகிறது.

**மதுரைக் கல்லூரிக்காக**

முதன்மை ஒருங்கிணைப்பாளர்

இரா. கார்த்திகேயன்
ஒருங்கிணைப்பாளர்

T. G. Varalakshmi
பொறுப்பாசிரியர்

**மதுரை, அரசு இசைக்கல்லூரிக்காக**

முதல்வர்

துறைத்தலைவர்

பொறுப்பாசிரியர்

இதன் ஒன்றாம் தரப்பான மதுரைக்கல்லூரி (தன்னாட்சி - சுயநிதிப்பிரிவு), தனது மாணவர்களுக்குத் தமிழ் இசை குறித்த சான்றிதழ் / பட்டயப் படிப்புகளை வழங்குவதற்கு முன்வந்து அதற்கு இரண்டாம் தரப்பினரின் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பினை வேண்டியுள்ளது. இது தொடர்பாக இரண்டு தரப்பினராலும் கீழ்க்காணும் வகைகளில் மாணவர்களை இணைத்துப் பயிற்றுவிக்கத் தீர்மானிக்கப்படுகிறது.

1. இரண்டு தரப்பினரும் சேர்ந்து மாணவர்களுக்கு மிகுபயன் தரும் வகையில் பன்னிரு திருமுறைப் பதிகங்கள் / நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களின் பண் / பழந்தமிழ் இசை தொடர்புடைய சான்றிதழ் / பட்டயப் படிப்புகள் வழங்குதல்.
2. பயிற்சிப் பட்டறைகள் / மாநாடுகள் / கருத்தரங்குகள் நடத்துதல்.

எனவே, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரஸ்பர நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, இங்குள்ள இரண்டு தரப்புகளும் பின்வருமாறு ஒப்புக் கொள்கின்றோம்.

**பிரிவு 1 : ஒத்துழைப்பு**

1.1 இரு தரப்பினரும் பொதுவான குறிக்கோள்களால் ஒன்றுபட்டுள்ளனர், மேலும் அவர்கள் தங்கள் செயல்பாடுகளை மேம்படுத்தும் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பிற்கான வழிகளை நிறுவவேண்டும். சாத்தியமான வாய்ப்புகள் குறித்து

1.2 இரு தரப்பும்; ஒருவருக்கொருவர் கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும். மற்றும் ஒருவருக்கொருவர் கூடுதல் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள அனைத்துத் தகவல்களையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**மதுரைக் கல்லூரிக்காக**

**முதன்மை ஒருங்கிணைப்பாளர்**

**ஒருங்கிணைப்பாளர்**

G. Varalakshmi
**பொறுப்பாசிரியர்**

**மதுரை, அரசு இசைக்கல்லூரிக்காக**

**முதல்வர்**

**துறைத்தலைவர்**

**பொறுப்பாசிரியர்**

1.2 முதல் தாப்பினருக்கும் இரண்டாம் தாப்பினருக்கும் இடையிலான ஒத்துழைப்பு, முதல் தரப்பினரின் தேவைகளை மனத்தில் கொண்டு, பொருத்தமான கற்பித்தல் / பயிற்சிமுறைகளை உருவாக்குவதில் அவர்களுக்குக் குறிப்பிடத்தக்க உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் இரண்டாம் தரப்பினரின் கலைத்திறன்களைத் திறம்படப் பயன்படுத்த உதவுவதாக அமைகிறது.

பிரிவு 2 : நோக்கம்

2.1 இரு தரப்பினருக்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பு மாணவர் சமூகத்திற்கு அவர்களின் கலைத்திறன் மற்றும் அறிவை மேம்படுத்த பெரும் நன்மையாக இருக்கும் என்று இரு தரப்பினரும் நம்புகின்றனர்.

பிரிவு 3 : செல்லுபடி பற்றியது

3.1 ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலம் ஒப்பந்தம் செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று வருடங்கள் ஆகும். இந்த ஒப்பந்தம் ஒரு மாத முன்னறிவிப்பில் இரண்டு தரப்பினராலுமோ அல்லது ஒரு தரப்பின் விருப்பத்தின் படியோ ரத்து செய்யப்படலாம் என ஒப்புக்கொள்ளப்படுகிறது.

**ஒப்புக்கொள்ளப்பட்டது**

**மதுரைக் கல்லூரிக்காக**

**முதன்மை ஒருங்கிணைப்பாளர்**

**ஒருங்கிணைப்பாளர்**

T. G. Varalakshmi
**பொறுப்பாசிரியர்**

**மதுரை, அரசு இசைக்கல்லூரிக்காக**

**முதல்வர்**

**துறைத்தலைவர்**

**பொறுப்பாசிரியர்**